பி.வா.சா.2– 14–ம் பிரதிவாதி, திரும்ப அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

2) என் தகப்பனார் பெயர், இராமர். என் தகப்பனார், இவ்வழக்கில் மூன்றாவது பிரதிவாதியாவார். என் தகப்பனார், கடந்த 12.11.2023–ம் தேதி இறந்துபோய்விட்டார். என் தகப்பனாரான, மூன்றாம் பிரதிவாதி இறந்தபின்னர், என் தாயாரை, 13–ம் பிரதிவாதியாகவும், என்னை, 14–ம் பிரதிவாதியாகவும் சேர்த்திருக்கிறார்கள். என் தாயார், கடந்த 10.08.2025–ம் தேதியில் இறந்துபோய்விட்டார். என்னை, இ.நடுப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். என் கணவர் பெயர், சதீஸ்குமார். வழக்குரை இரண்டாம் லக்கச்சொத்தை, உமது தகப்பனாரான, மூன்றாவது பிரதிவாதி, பி.வா.சா.ஆ.12–ன் மூலம் கிரையம் பெற்றபொழுது, உமக்கு சுமார் 12–வயதுதானே என்றால், சரிதான். எனக்கு, தற்பொழுது, 35–வயதாகிறது. ஆனால், நான், என் நிரூபணவாக்குமூலத்தில், என் வயதை 33–என்று குறிப்பிட்டிருக்கிறேன். நீர், உமது திருமணத்திற்கு பின்பு, இ.நடுப்பட்டியில், உமது கணவரோடுதானே வசித்து வருகிறீர் என்றால், ஆமாம்.

3) உமது தகப்பனார், பி.வா.சா.ஆ.12–கிரையப்பத்திரத்தின் மூலம், கிரையம் பெற்ற சொத்தும், அத்தோடு சேர்ந்திருந்த, வழக்குரை முதலாவது லக்கச்சொத்தும், முன்பு, மொக்கையத்தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்ற விபரத்தை, தெரிந்து கொண்டீர்தானே என்றால், இல்லை. நீர், தற்பொழுது எங்கே வசித்து வருகிறீர் என்றால், இ.நடுப்பட்டியில். மொக்கையத்தேவருக்கு, வாதியும், முதலாவது பிரதிவாதியும், இரண்டாம் பிரதிவாதியின் கணவரான, சலவாயன் என்ற பால்சாமியும், வாரிசுகள் என்ற விபரத்தை தெரிந்து கொண்டீர்தானே என்றால், தெரிந்து கொண்டேன். சலவாயன் என்ற பால்சாமியின், மனைவிதானே, இரண்டாவது பிரதிவாதி என்றால், ஆமாம். மேற்படி மொக்கையத்தேவரின் மகள்தானே, முதலாவது பிரதிவாதி என்றால், சரிதான். வாதி, மேற்சொன்ன மொக்கையத்தேவரின் மகள்தானே என்றால், ஆமாம். வாதி, வழக்குரைச்சொத்தின் ஒரு பகுதியில், தகரம்போட்டு, குடியிருந்து வருகிறார்தானே என்றால், ஆமாம்.

4) வாதிக்கும், முதலாவது பிரதிவாதிக்கும், இரண்டாம் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, பாகம் எதுவும் நடைபெறாத நிலையில், இரண்டாவது பிரதிவாதி, வழக்குரை இரண்டாம் லக்கச்சொத்தை, பி.வா.சா.ஆ.12–கிரையப்பத்திரத்தின் மூலம், மூன்றாம் பிரதிவாதிக்கு, கிரையம் செய்து கொடுத்திருப்பது, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், அது சரியல்ல. வாதிக்கும், முதலாவது பிரதிவாதிக்கும், இரண்டாம் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே, வழக்குரைச்சொத்துக்களைப்பொறுத்து, பாகம் எதுவும் செய்துகொள்ளாமல், கூட்டாக அனுபவித்து வரும் நிலையில், இரண்டாவது பிரதிவாதியின் கணவர், வழக்குரை முதல் மற்றும் இரண்டு லக்கச்சொத்துக்களை, வா.சா.ஆ.2–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம், இரண்டாம் பிரதிவாதிக்கு, தானம் செய்து கொடுத்திருப்பதும், சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், நாங்கள் இடம் வாங்கும்பொழுது, அவர் இல்லை.

5) வாதி, வழக்குரைச்சொத்துக்களை, முதல் மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளோடு கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறார் என்றால், அது சரியல்ல. உமக்கு, வழக்குரைச்சொத்துக்கள், மொக்கையத்தேவருக்கு சுயார்ஜித சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்ற விபரம் தெரியுமா என்றால், பால்சாமிதேவர் சொத்து என்று சாட்சி கூறுகிறார். வழக்குரைச்சொத்துக்கள் மொக்கையத்தேவரின் பூர்வீகச் சொத்துக்கள் என்றால், சரிதான். இரண்டாம் பிரதிவாதியோ, அவரது கணவரோ, வழக்குரைச்சொத்துக்களில், வாதி மற்றும் முதலாவது பிரதிவாதிக்குள்ள பங்குகளை, கிரையமோ, விடுதலையோ எழுதி வாங்கவில்லைதானே என்றால், வாங்கவில்லை. வாதி, வழக்குரைச்சொத்துக்களில் அவருக்கிருந்த பங்கினை, வாய்க்கிறாலாக, இரண்டாம் பிரதிவாதியின் கணவருக்கு தானமோ, கிரையமோ கொடுக்கவில்லை என்றால், அது பற்றி எனக்குத்தெரியாது. இரண்டாம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர்தானே, நான்காம் பிரதிவாதி என்றால், சரிதான். நான்காம் பிரதிவாதியின் மகள்கள்தானே, ஐந்து, ஆறு, ஏழு பிரதிவாதிகள் என்றால், ஆமாம். உமது தகப்பனார், பாகமே நடைபெறாத சொத்துக்களை, பி.வா.சா.ஆ.12–ன் மூலம், கிரையம் பெற்றிருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், அது சரியல்ல.

6) இரண்டாவது பிரதிவாதியின் கணவர், உயிரோடு இருந்தவரை, வழக்குரை முதலாவது லக்கச்சொத்தின், வடபுறத்தில், கீழ்புறத்தில் உள்ள, வீட்டில், வசித்து வந்தார்தானே என்றால், சரிதான். இரண்டாம் பிரதிவாதியின் கணவர், கடந்த 12.12.2017–ம் தேதி இறந்துபோய்விட்டார்தானே என்றால், ஆமாம். வாதியின் பங்கை, பி.வா.சா.ஆ.12–கிரையப்பத்திரம் கட்டுப்படுத்தாது என்றால், அது சரியல்ல.

Taken down by me in the open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

PRABAKARAN

Digitally signed by PRABAKARAN
Date: 2026.01.12 18:44:39 +0530

Sub Judge,
Usilampatti(FAC)